

நாமக்கல் கிழக்கு மாவட்டம் வெண்ணந்தூர் ஒன்றியம் அனந்தகவுண்டம் பாளையத்தில் மறைந்த கழக மூத்த மூன்னோடி ஏ.ஆர்.துரைசாமி நினைவை போற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ள 100 அடி நினைவு கொடி கம்பத்தில் கழக இருவண்ண கொடியினை ஏற்றி வைத்து நிழற்கூடம் மற்றும் உள் விளையாட்டு அரங்கத்தை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். ராஜேஸ்குமார், முன்னாள் அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் ஆகியோர் திறந்து வைத்தனர்.
இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. ராமசுவாமி, ஒன்றிய செயலாளர்கள் ஆர்.எம். துரைசாமி, கே.பி. ஜெகநாதன், கண்ணன், மருத்துவர்.தருண், மருத்துவர்.மாயவன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் ரங்கசாமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தஞ்சை மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டத்தில் குழுவின் தலைவர் ச.முரசொலி எம்.பி தலைமை வகித்தார். உடன் மாநிலங்களவை உறுப்பினர்கள் சு.கல்யாணசுந்தரம், சுதா, கழக சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், கோவி. செழியன், ஆர்.வைத்தியலிங்கம், கா.அண்ணாதுரை, என்.அசோக்குமார், த.வெ.க எம்.எல்.ஏ சரவணன், மாவட்ட ஆட்சியர் ரேவதி, மேயர்கள் மரு.அஞ்சுகம் பூபதி, சரவணன், துணை மேயர் சு.ப.தமிழழகன், உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டம் வெண்ணந்தூரில் – கழக மூத்த முன்னோடி

# ஏ.ஆர்.துரைசாமி நினைவு நிழற்கூடம் திறப்பு!

## ராஜேஸ்குமார் எம்.பி. – முன்னாள் அமைச்சர் மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல், ஜூலை 18 -

நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர் ஒன்றியம் அனந்தகவுண்டம்பாளையம் ஊராட்சியில், முன்னாள் உள்ளாட்சிப் பிரதிநிதி கழக மூத்த முன்னோடி ஏ.ஆர். துரைசாமி நினைவு நிழற்கூடத் திறப்பு விழா மற்றும் 100 அடி உயரக் கம்பத்தில் கழக கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

வெண்ணந்தூர் ஒன்றியம் அனந்தகவுண்டம்பாளையத்தில் மறைந்த நம் நினைவில் வாழும் கழகத்தின் மூத்த மூன்னோடி ஏ. ஆர்.துரைசாமி அவர்களின் நினைவை போற்றும் வகையில் அவரது குடும்பத்தினர் சார்பாக அமைக்கப்பட்டுள்ள 100 அடி நினைவு கொடி கம்பத்தில் கழக இருவண்ண கொடியினை ஏற்றி வைத்து அவரது நினைவாக அமைக்கப்பட்டுள்ள நிழற்கூடம் மற்றும் உள் விளையாட்டு அரங்கம் திறப்பு விழா நடைபெற்றது

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். ராஜேஸ்குமார், முன்னாள் அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் ஆகியோர் இணைந்து நிழற்கூடத்தைத் திறந்து வைத்து, கட்சிக் கொடியை ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து, அப்பகுதி மாணவர்களின் நலனுக்காக அமைக்கப்பட்ட கிரிக்கெட், கபடி மற்றும் டென்னிஸ் விளையாட்டு மைதானங்களையும் அவர்கள் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. ராமசுவாமி, ஒன்றிய செயலாளர்கள் ஆர்.எம். துரைசாமி, கே.பி. ஜெகநாதன், பேரூர் செயலாளர் திரு.கண்ணன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் மருத்துவர்.தருண், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மருத்துவர். மாயவன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் ரங்கசாமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# முத்தமிழறிஞர் கலைஞர் 103ஆவது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

## அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் - கோவி.செழியன் - காதர்பாட்சா முத்துராமலிங்கம் சிறப்புரை!



தூத்துக்குடி,ஜூலை 18-

முன்னாள் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் 103ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (ஜூலை 17) தூத்துக்குடி தெற்கு மாவட்டம் ஸ்ரீவை குண்டத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பல நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒருபகுதியாக நேற்று (ஜூலை 17) மாலை 6 மணிக்கு ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதி ஸ்ரீவைகுண்டம் வ.உ.சி திடலில் ஒன்றிய செயலாளர் எஸ்.கொம்பையா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட துணைச் செயலாளர் ச.ஆறுமுகப் பெருமாள் வரவேற்புரை யாற்றினார். ஒன்றியச் செயலாளர்கள் பி.ஜி.ரவி, எஸ்.ஆர்.கோட்டாளம், ச.இசக்கி பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரூர் செயலாளர் கா.சுப்புராஜ் நன்றி யுரை யாற்றினர்.

இந்த கூட்டத்தில் கலைமாமணி இசையரசு டாக்டர் இறையன்பு குத்தூஸ் வழங்கும் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தி.மு.க. வர்த்தர் அணி துணைத் தலைவர் கோவி செழியன் எம்.எல்.ஏ. ராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர்பாட்ஷா(எ) முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை யாற்றினார்.

மேலும் தி.மு.க. நிர்வாகிகள் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், சரத்பாலா, அஜிதா அக்னல், டாக்டர்.செ. வெற்றிவேல், ஜெ.ஜெசி பொன்ராணி, எஸ்.எஸ். மனோஜ், அ.பிரம்மசக்தி, க.மாடசாமி, சி.எஸ்.டி. செந்தூர்மணி, எஸ்.அருணாச்சலம், ஜெ.ஜெயக்குமார் ரூபன், ச.ஆறுமுகப் பெருமாள், ஜெ.ஜெப தங்கம் பிரேமா, வி.பி. ராமநாதன், பி.எம்.ராமஜெயம் ஆகியோர் உரை யாற்றினர்.

இந்த கூட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் தொகுதி மற்றும் மாவட்டம் முழுவதும் உள்ள மாநில மாவட்ட நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள் மாவட்ட அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டம் வார்டு கிளை செயலாளர்கள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னணியினர் பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

### ம.சேசுராசு தலைமை - அன்பழகன் பொற்கோ வரவேற்புரை!

# மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் க.மு.மாணிக்கம் திருவுருவப் படத்திறப்பு!

## மும்பை கலைஞர் மாளிகையில் நிகழ்ச்சி! கழகத்தினர் பங்கேற்பு!



மும்பை, ஜூலை 18 -

மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் க.மு.மாணிக்கம் அவர்கள் உடல்நலக்குறைவால் 13.06.2026 அன்று மும்பையில் மறைந்தார்.

அவரது திருஉருவப் படம் திறப்பு /நினை வேந்தல் நிகழ்வு மும்பை தி.மு.க. சார்பில் 19.07.2026 ஞாயிறு மாலை 6 மணிக்கு தாராவியில் உள்ள கலைஞர் மாளிகையில் மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெறுகிறது.

தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் அன்பழகன் பொற்கோ வரவேற்புரை யாற்றுகிறார்.

பம்பாய் திருவள்ளுவர் மன்றம்,மற்றும் கலைஞர் தமிழ்ச்சங்கம் செயலாளர் ஜேம்ஸ்தேவதாசன் படத்தை திறந்து வைக்கிறார். தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பானர் மாறன் ஆரியசங்காரன், மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன், பகுத்தறிவாளர் கழக தலைவர் அ.இரவிச்சந்திரன், முன்னாள் தாராவி தி.மு.க. செயலாளர் என்.வி.சண்முகராசன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

நினைவேந்தல் உரை யாற்றுவோர்:

எஸ் சாலமோன் ராஜா விசிக அமைப்பாளர் மும்பை, அரசூர் இரா.மதியழகன், ஜெரிமெரி தமிழ்ச் சங்கம் தலைவர் இல.முருகன், ஆ.பாலசுப்ரமணியன் (முல்லூரண்ட்) இரா.ரவிரஜினி,தலைவர்,தமிழ் ஓட்டுநர் சங்கம் மும்பை. காரை கரு.இரவீந்திரன் (பீவண்டி) கே.ஏ.ஜாகீர் உசேன் (தானே) தாராவி, சி.பாண்டியன், தே.ஸ்டீபன் கலந்தை சண்முகவேலு, பிரபுபிலிப், கோ.கருணாநிதி, பொய்சர் க.மூர்த்தி, அன்பில் ரஞ்சன், காளியப்பன், மும்பை திராவிடர் கழக நிர்வாகி கள் :

இ.அந்தோணி (துணைத் தலைவர்) ஜெ.வில்சன் (செயலாளர்) பெரியார் பாலா ( பொருளாளர்) அ.கண்ணன் (துணைச்செயலாளர்) உலகநாதன்,சங்கர் திராவிட், குப்பன், பொன் சுப்பிரமணியன், ஜி.முத்து, மு. ராசேந்திரன்,க.மு. முனியன்,

கே .காளியப்பன், கா. சின்னையா, ராஜேந்திர குமார், கிளைக் கழகச் செயலாளர்கள்: சேரை சா.பிரகாஸ், இரா. காந்தி, அப்துல் திவான் மைதீன், சேலம் மா.சீனிவாசன்,வே. ரவிச்சந்திரன், பி.இராமையா, பொன்.இலக்குமணன் ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றுகிறார்கள்.

மனோகரன் மாணிக்கம் நன்றியுரையாற்றுகிறார்.

### மதுரை மாநகராட்சி கவுன்சிலர்கள் மீது குற்றம் சாட்டிய

# அமைச்சர் நிர்மல்குமார் மீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்!

## மதுரை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் கழக கவுன்சில் குழுத் தலைவர் ம.ஜெயராமன் வலியுறுத்தல்!

மதுரை, ஜூலை.17-

மதுரை மாநகராட்சி கவுன்சிலர்கள் கூட்டம் நேற்று நடந்தது. பொறுப்பு மேயர் நாகராஜன் தலைமை வகித்தார். கமிஷனர் கௌரவ் குமார் முன்னிலை வகித்தார், கவுன்சிலர்கள், அதிகாரிகள், பங்கேற்றனர்.

திமுக கவுன்சில் குழு தலைவர் ஜெயராமன் பேசும் போது, “மதுரை மாநகராட்சி வரிமுறைகேடு புகாரில் கவுன்சிலர்கள் மீது தவறாக குற்றம் சாட்டப்படுகிறது. இதில் ரூ.1.20 கோடிக்கு தவறு நடந்ததும், குற்றவளிகளாக 6 பேர் மட்டுமே இருப்பதும், வரி முறைகேட்டு தொகையில் 5 பாதிக்கும் அதிக தொகை சீரமைப்பில் சரிசெய்த தும் தெரிந்துள்ளது. ஒரு வழக்கு கோர்ட்டில் இருக் கும்போது, தவறாக கவுன்சிலர்கள் மீது குற்றம்சாட்டிய அமைச்சர் நிர்மல்குமார் உள்ளிட்டோர் மீது மாநகராட்சியில் கண்டன தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

இவ்வழக்கில் திமுக கவுன்சி லர்களை சேர்ப்பதற்கு சட்டத்துறை அமைச்சரான நிர்மல்குமார் அதிகாரிகளுக்கு நெருக்கடி தந்து வருகிறார். இதில் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க சுப்ரீம் கோர்ட் வரை கூட செல்வோம்” என்றார். தொடர்ந்து கவுன்சிலர் கள், கவுன்சிலர்களுக்கான வார்டு பணிக்கான ரூ.25 லட்சம் நிதியை ரூ.50 லட்ச மாக உயர்த்தித் தர கோரினர். மதுரையில் போஸ்டர் ஒட்டும்தொழிலில் உள்ள 450க்கும் அதிக குடும்பங்க ளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அரசு கட்டிடங்கள் தவிர்த்து, தனியார் கட்டிடங்களில் போஸ்டர்கள் ஒட்ட அனுமதிக்க கவுன்சிலர்கள் வேண்டினர்.

ஆரப்பாளையம் உள்ளிட்ட முக்கிய 5 இடங்களுடன், மேலும் 20 இடங்கள் ஒதுக்குவதாக கமிஷனர் தெரிவித்தார்.

### தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா!

# பாவூர்சத்திரத்தில் காமராசர் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## வே.ஜெயபாலன் தலைமை! மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ.முன்னிலை!

தென்காசி.ஜூலை 18 -

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 124 வது பிறந்த நாளை முன்னிட்டு, தென்காசி தெற்கு மாவட்டம் பாவூர்சத்திரத்தில் அமைந்துள்ள காமராஜர் அவர்களின் முழு திருவுருவச் சிலைக்கு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தலைமையில்,தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் முன்னிலையில் தொழிலதிபர் ஆர்.கே. காளிதாசுடன் இணைந்து மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் சேசுராஜன்,கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சீனித்துரை,தெற்கு ஒன்றிய செயலாளர் ஜே.கே.ரமேஷ்,கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் காவேரி சீனித்துரை,ஒன்றிய செயலாளர்கள் பொன் செல்வன், சிவகுமார்,கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# இரவு நேரத்தில் தொடர்ந்து மின்தடை - மாத்தூர் பகுதி மக்கள் சாலை மறியல்!

மணலி, ஜூலை 18 -

மணலி மாத்தூர் பகுதியில் நேற்றிரவு மின்வெட்டு ஏற்பட்டதால் கோபம் அடைந்த மக்கள், சுங்கச்சாவடியை முற்றுகையிட்டு மறியல் போராட்டம் நடத்தினர்.

வடசென்னைக்கு உட்பட்ட மாதவரம், கொசுப்பூர், சென்றம்பாக்கம், செட்டிமேடு, விளாங்காடு பக்கம் மற்றும் செங்குன்றம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலி, பால் பண்ணை, எம்.எம்.டி.ஏ மற்றும் வடபெரும்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த ஒரு மாதமாக அடிக்கடி இரவு நேரங்களில் மின்சாரம் தடை ஏற்படுவதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை மற்றும் மாணவ, மாணவிகள், நோயாளிகள் என பல தரப்பினரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இது சம்பந்தமாக மின்வாரிய அதிகாரிகளிடம் பலமுறை புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக இருந்து வருகின்றனர்.

இந்தநிலையில் நேற்றிரவு மாத்தூர் ஆம்ஸ்ட்ராங் நகர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 4 மணி நேரம் மின்சாரம் இல்லாததால் கடும் புழுக்கம் காரணமாக பொதுமக்கள் தவித்துள்ளனர். இதுகுறித்து மாத்தூர் எம்எம்டிஏ மின்வாரிய அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என என்று தெரிகிறது. இதனால் கடும் கோபம் அடைந்த மக்கள், கொசப்பூர் மாத்தூர் பகுதியில் உள்ள சுங்கச்சாவடியை முற்றுகையிட்டு அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். இதன்பின்னர் அவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

அப்போது பொதுமக்கள், “மின்சாரம் சும்மாவா தருகிறீர்கள்? மாதந்தோறும் கட்டணம் வசூலிக்கிறீர்கள்... ஆனால் அடிப்படை தேவையே சீராக வழங்க முடியவில்லையா” என்று கோஷமிட்டனர். இதுபற்றி தகவல் கிடைத்ததும் போலீசாரும் மின்வாரிய அதிகாரிகளும் வந்து மறியல் நடத்தியவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, ‘‘உரிய நடவடிக்கை எடுக்கப்படும்’ என்று உறுதி அளித்தனர். இதையடுத்து போராட்டத்தை கைவிட்டனர்.



கும்பகோணம் தில்லையம்பூர் ஊராட்சி கீழத்தெருவை சேர்ந்த பவுன்ராஜ் லலிதா இவர்களின் மகன் வினோத் மின்சார கம்பத்தில் வேலை பார்க்கும் போது மின்சாரம் தாக்கி இறந்ததை அறிந்த தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் இறந்த வினோத் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது துணைவியாருக்கும்,தாயாருக்கும் ஆறுதல் கூறி, நிதியுதவி வழங்கினார். அருகில் தில்லையம்பூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் டி.எம்.கரிகாலன், பெரும்பாண்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.கே.பாஸ்கர், மு .ஒ.குழு.உறுப்பினர் பாண்டியன், கிளைக் கழகச் செயலாளர் ஆனந்த், ராஜ்மோகன், ராஜசேகர், சாமிநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### சிவகங்கையில் 38 ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்த

# அரசு அருங்காட்சியகம் திடீர் மாற்றம்!

## பொதுமக்கள் ஏமாற்றம்!

சிவகங்கை .ஜூலை 18 -

சிவகங்கை மாவட்ட தலைநகராக சிவகங்கை கடந்த 1985 இல் அறிவிக்கப்பட்டது . .1988 ஆண்டு முதல் மாவட்ட தலைநகரமாக செயல்படத்துவங்கியது. 1988 ஆம் ஆண்டு முதல் சிவகங்கை வாரச் சந்தை ரோட்டில் வாடகை கட்டிடத்தில் அரசு அருங்காட்சியகம் செயல்பட்டு வந்தது.

இந்த அருங்காட்சியகத்தில் பல்வேறு அரிய சிலைகள், ஓவியங்கள் மாவட்டத்தை பற்றிய வரலாறுகள் ,அடங்கிய தொகுப்புகள் போன்றவை பொதுமக்கள் மாணவர் கள் சுற்றுலா பயணிகள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது . இதை மாவட்டம் முழுவதும் மற்றும் வெளிமாவட்டங்களிலிருந்து வரும் பார்வையாளர்கள் சுற்றுலா பயணிகள், மாணவர்கள் மாவட்டத்தின் வளர்ச்சி மற்றும் மாவட்டத்தை பற்றி பல்வேறு பயனுள்ள தகவல்களை தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது . இந்த அரசு அருங்காட்சியத்தில் ஓவியப்போட்டிகள் , கலை போட்டிகள் ,மற்றும் பல்வேறு பேச்சு போட்டிகள் மற்றும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தது .தற்போது 38,ஆண்டுகளாக வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் அருங்காட்சியகம் மிகவும் பழமையான கட்டடத்தில் இயங்கிவந்ததால் கடந்த2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் பூட்டப்பட்டு உள்ளது.

கடந்த ஒரு ஆண்டுகளாக பொதுமக்கள் யாரும் பார்வையிட அனுமதிக்கப் பட வில்லை.இதனால் அருங்காட்சியகத்தை பார்க்க வருபவர்கள் அருங்காட்சியகம் பூட்டி கிடப்பதை பார்த்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பி செல்கிறார்கள். இந்த நிலையில் தற்பொழுது இந்த அரசு அருங்காட்சியகத்தை சிவகங்கை மதுரை சாலையில் உள்ள திருமாஞ்சோலை ஏனாதி சாலையில் உள்ள கிராமத்திற்கு மாற்றுவதற்கு அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது.

இவ்வாறு மாற்றப்பட்டால் சிவகங்கை நகரில் மையமான பகுதியில் அமைந்துள்ள அரசு அருங்காட்சியத்தினை எளிதாக சென்று பார்த்தது போல் பொதுமக்கள் திருமாஞ்சோலைக்கு சென்று பார்க்க முடியாது .அங்கு பஸ் வசதி குறைவு .மேலும் மாவட்ட த்தில் பல்வேறு ஊர்களிலிருந்து வருபவர்களுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. மற்ற மாவட்டங்களில் தலைநகரில் தான் அரசு அருங்காட்சியகம் இயங்கி வருகிறது. ஆனால் திருமாஞ்சோலைக்கு மாற்றப்படுவது பொதுமக்களுக்கும் , சுற்றுலா பயணிகளுக்கு மிகவும் சிரமமாக இருக்கும் .எனவே அரசு கட்டிடங்கள் சிவகங்கை நகரில் ஏராளமான கட்டிடங்கள் உள்ளது. அவற்றில் இந்த அரசு அருங்காட்சியகம் இயங்கப்பட வேண்டும் .அதற்கான முயற்சியில் மாவட்ட நிர்வாகம் ஈடுபடவேண்டும். என்று சமூக ஆர்வலர்கள், மாணவ மாணவிகள்பொதுமக் கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் அரசிற்க்கு கோரிக்கை விடுத்துள்ளார்கள்.